17.02.2026 பி.வா.சா.1 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண். 240 /2015 ) திரு.எம்பெருமாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> -

1) இந்த வழக்கில் எனது தகப்பனார் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கைக்கு வாதி தரப்பில் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் அந்த விவரம் தெரியுமா என்றால் கொடுத்துள்ளார் எனக்கு திருப்தியாக இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் பதில் எதிர்வழக்குரையை மறுத்து சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது வாதிக்கு எனது வழக்கறிஞர் மூலமாக ஒரு அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.10 ஐ அறிவிப்புக்கு இந்த வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக தற்போது காண்பிக்கப்படும் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.10 ஆவணம் எனது தகப்பனார் தகவல் சொல்லிதான் வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ள போது வாதியின் வீட்டிற்குபின்னாடி உள்ள கதவை உடைத்துவிட்டேன் என்றும் வாதி புகார் கொடுத்துவிடுவார் என்ற பயத்தில் நான் வழக்கறிஞரிடம் சொல்லி பொய்யாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல கதவு வைக்கவுமில்லை அதை நாங்கள் உடைக்கவுமில்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் வழக்கு நிலுவையில் உள்ள போது வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரத்தை சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எனது வீட்டிற்கு பின்புறம் நயினாருக்கும், வாதி மற்றும் வாதியின் சகோதரர்களுக்கும் நடைபெற்ற விவரம் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கு நடைபெற்ற காலமான 1991 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தற்போது நாங்கள் வசித்து வரும் வீட்டில் எனது சித்தப்பா கிருஷ்ணன் குடியிருந்து வந்தார் என்றால் அப்போது இல்லை அவர் கோயமுத்தூரில் இருந்தார் நாங்கள் தான் இரண்டு வீட்டிலும் குடியிருந்தோம். அந்த வழக்கில் நயினாருக்கு ஆதரவாக எனது சித்தப்பா சாட்சியம் அளித்தார் என்றால் தெரியவில்லை.அதனை விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

2) எதிர்கோரிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள 1 ம்தபசில் சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்து என இதற்கு முன் நடைபெற்ற அ.வ.எண்.167/1991 ல் உறுதி செய்யப்பட்டுவிட்டது என்றால் அந்த சர்வே எண் வேறு தற்போது காண்பிக்கப்பட்டுள்ள

சொத்தின் சர்வே எண் ஆகும். எனது நிருபண வாக்குமூலத்தில் அந்த வழக்கின் தீர்ப்பு சொத்தின் சர்வே எண் வேறு தற்போது நடைபெற்றுவரும் சொத்தின் சர்வே எண் வேறு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்கோரிக்கையில் காண்பிக்கப்படும் சொத்திற்கு நான்கு மால்கள் விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை 1 வதுதபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கு மனை என்பதற்கு என்ன ஆதாரம் கொடுத்துள்ளோம் என்றால் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் சர்வேயர் கொடுத்த ஆவணம், வி.ஏ.ஓ.கொடுத்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எதிர்கோரிக்கை 2 வதுதபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கு என்று காண்பித்துள்ளஇடத்தில் சர்க்காருக்குப் பாத்தியப்பட்ட கட்டிடமோ, மின் கம்பமோ, தூண்களோ இல்லை என்றால் வீட்டிற்குரிய மின் சர்வீஸ் வயர் செல்கிறது. அந்த மின் சர்வீஸ் வயர் மின் கம்பத்திலிருந்து வீட்டிற்கு இணைப்பிற்கு எடுக்கப்பட்ட வயர் என்றால் சரிதான். மின்வயர் அந்தஅந்த வீட்டிற்கு எடுக்கப்பட்டப்பட்ட சொந்த மின்வயர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்கோரிக்கை 2 ம் தபசிலில் காண்பிக்கப்பட்டுள்ள அளவுகள் அடித்தல் திருத்தங்களுடன் கண்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் வசதி உரிமையோ, புழங்குரிமையோ இல்லை என்றால் 1948 ஆமஆண்டுமுதல் வெள்ளைஅடித்து வருவதாலும், மச்சுபடிக்குசெல்வதாலும் தண்ணீர் கழிப்பதாலும் அனுபவ பாத்தியதை உள்ளது. நான் சொல்லுவது போன்று 1948 ல் அந்த வீடே இல்லை என்பதால் அனுபவ பாத்தியதை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து வாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டு வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் 1 வது தபசில் சொத்து வாதிக்கு கிரையம் மூலம் தனித்துப்பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதில் நான் உரிமை கோருவதற்கு சட்டப்படி தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
17.02.2026.